# பார்ப்பன –
# இந்திய தேசிய –
# பன்னாட்டுக்கொள்ளை

**கொளத்தூர் மணி**

வெளியீடு:
**திராவிடர் விடுதலைக் கழகம்**
95, டாக்டர் நடேசன் சாலை,
அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600004.
தொலைபேசி: 044-24980745
dvkheadoffice@gmail.com

**நூல் கிடைக்குமிடங்கள்:**

பெரியார் படிப்பகம், பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை - 636 401 - 9786316155

பெரியார் படிப்பகம், தோழர் பத்ரி நாராயணன் நினைவு நூலகம்
73 / 1 இலாயிட்ஸ் சாலை, சென்னை - 600 014 - 9941613535

இராவணன் படிப்பகம், இராதாகிருட்டிணன் நகர்
அரியாங்குப்பம், புதுச்சேரி - 605007 - 9443045614

பெரியார் படிப்பகம், 4 / 480 பாரதி நகர், வீரபாண்டி . அஞ்சல்
திருப்பூர்-641605 - 9842088466

பெரியார் புத்தக நிலையம், கண்டோன்மெண்ட், ஸ்டேட்பேங்க் மண்டல
அலுவலகம் எதிரில், திருச்சி - 620001 - 9865596940

மாவட்டத்தலைமை அலுவலகம், 53, நகராட்சி வணிகவளாகம்
பேருந்துநிலையம் அருகில், கோபிச்செட்டிபாளையம், - 9894962333

முதல் பதிப்பு : 2013 ஜூலை
விமர்சனங்களை அனுப்ப - dvkheadoffice@gmail.com
மின் நூலாகத் தரவிறக்கம் செய்ய
www.dvkperiyar.org

**நன்கொடை: ரூ.10.00**

# முன்னுரை

ஜாதி - தீண்டாமைக்கொடுமைகள் புதிய வடிவங்களில் உயிர்ப்பித்துக் கொண்டிருப்பதையும் - பெரியார் கருத்துக்களைச் சிதைக்க - பார்ப்பனியத்துக்குத் துணை சேர்க்கும் போக்குகளையும் விளக்குகிறார் தோழர் கொளத்தூர் மணி.

பெரியார் முன்வைத்த ‘திராவிடர்’ என்ற கோட்பாடு பார்ப்பனரல்லாதாரை ஒரே குடையின்கீழ் இணைப்பதே ஆகும். ம.பொ.சி வைத்த ‘தமிழ்த் தேசியம்’ பார்ப்பனரல்லாத மக்களைக் கூறுபோட்டு - பார்ப்பனர்களை இணைத்துக்கொண்டது. திராவிடம் என்பதன் உள்ளடக்கத்தை தவிர்த்துவிட்டு அகராதியில் சொல்லுக்குப் பொருள் தேடுவது அபத்தம் என்ற கருத்தை ஆழமாக புரிய வைக்கிறது இந்த நூல்.

திராவிடர் விடுதலைக் கழகம்

மயிலாடுதுறை சின்னகடைவீதியில் 11.03.2011
வெள்ளிக்கிழமை “தமிழர்களைச் சுரண்டும் பார்ப்பன -
இந்திய தேசிய - பன்னாட்டுக் கொள்ளை” விளக்கப் பொதுக்
கூட்டத்தில் தோழர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.

பார்ப்பன இந்திய தேசிய பன்னாட்டு கொள்ளை பற்றிய விளக்க பொதுக்கூட்டத்திற்கு தலைமேயற்று நடத்திக் கொண்டிருக்கிற பெரியார் திராவிடர் கழக மாவட்ட தலைவர் அருமைத் தோழர் ரசீத்கான் அவர்களே ஒரு நீண்ட விளக்கவுரை ஆற்றி அமர்ந்திருக்கிற கழகத்தின் பொதுச் செயலாளர் தோழர் விடுதலை ராசேந்திரன் அவர்களே, தமிழர் உரிமை மீட்பு இயக்கத்தின் தோழர் முரளீதரன் அவர்களே, தமிழர் உரிமை மீட்பு இயக்கத்தின் தோழர் சுப்புமகேஷ் அவர்களே, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் நகரச் செயலாளர் தோழர் பன்னீர்செல்வம் அவர்களே, தன்னுடைய உணர்ச்சிகரமான இசையால் பல்வேறு செய்திகளை மக்களின் மனதில் ஆழப் பதித்து சென்றிருக்கிற தோழர் சமர்ப்பா குமரன் அவர்களே, குழுவினர்களே, வருகை தந்திருக்கும் பெருமக்களே உங்கள் அனைவருக்கும் வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் திராவிடர் கழகம் பெரியார் கொள்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கத் தோடும், தொடங்குகிற போது பெரியார் காலத்திய தமிழகத்தை உருவாக்குவோம் என்ற முழக்கத்தை முன்வைத்தும் தொடங்கப் பட்ட ஒரு இயக்கம். பெரியாரின் கொள்கைகளை அந்த கால கட்டத்தின் தேவைகள் கருதி எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் தான் பல்வேறு நடவடிக்கைகளை, போராட்டங் களை, பரப்புரை பயணங்களை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

பெரியார் தொடக்க காலத்தில் சாதி ஒழிப்பை தனது இலக்காக கொண்டு சுயமரியாதை இயக்கத்தைக் கண்டார். சுயமரியாதை இயக்கம் கண்ட போது மட்டுமல்ல அவர் காங்கிரஸ்காரராக இருந்த போதே அந்த கருத்தோடு தான் இருந்திருக்கிறார் என்பதை பல்வேறு நிகழ்வுகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. 1922ம் ஆண்டில் அவர் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த போது நடந்த திருப்பூர் மாநாட்டில் நாடார்களையும், தாழ்த்தப்பட்டவர் களையும் கோவிலுக்குள் நுழைய வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டு வருகிறார். அந்த தீர்மானத்திற்கு மீது எதிர்ப்பு வருகிறது. எதிர்ப்பு வந்தது மதுரை வைத்தியநாத அய்யரிடமிருந்து. அவர் தான் பின்னாளில் கோவில் நுழைவு போராட்டம் நடத்தினார் என்று

பாராட்டப்படுகிற ஒருவர். அவர் சொல்லுகிறார் இந்திய நாட்டின் சாஸ்திரங்களை நீங்கள் அறிந்திருக்கவில்லை. இதிகாசங்களை நீங்கள் தெரிந்திருக்கவில்லை. மனு தர்மத்தை நீங்கள் கற்றிருக்கிறீர்களா? இராமாயணத்தை படித்திருக்கிறீர்களா? அதிலெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் உரிமை சம்பூகனுக்கான உரிமையை பற்றி இராமாயணம் பேசுகிறது. மனுதர்மம் எல்லோருக்கான உரிமையை பற்றியும் பேசுகிறது. இவைகளையெல்லாம் படித்திருகிறீர்களா என்றெல்லாம் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார். அதற்கு பெரியார் சொல்கிறார் அது எனக்கு தெரியுமோ தெரியாதோ எனக்கு வேண்டியது எல்லோருக்குமான சமஉரிமை. இந்துக்கள் என்று சொல்லப்படுகிற அனைவருக்கும் இந்த உரிமை வழங்கப்பட வேண்டும். இந்து கோயிலில் நுழைவதற்கு, அதற்கு ஒரு தடையாக இருக்குமேயானால் இந்து மனுதர்ம சாஸ்திரமாக இருந்தாலும் இராமாயணமாக இருந்தாலும் அவற்றை எரிப்பேனே தவிர இதை விட்டுக்கொடுக்க முடியாது என்று தான் அவர் தொடங்குகிறார். அப்போது காங்கிரஸ்காரர் 1922ல்.1925ம் ஆண்டு குடிஅரசு எல்லாம் நாங்கள் வெளியிட்ட பின்னால் அந்த வெளியீட்டின் போது பலவற்றை காண நேர்ந்தது.

அவர் காங்கிரஸ்காரராக இருந்த போது அவர் எடுத்து வைத்த செயல்கள் காரைக்குடியில் ஜில்லா மாநாட்டிற்கு தலைமை தாங்குகிறார். தலைமை உரையில் அவர் பேசுகிறார். ஜாதி தீண்டாமையை பற்றித் தான் பேசுகிறார். அதில் தாழ்த்தப் பட்ட மக்களை என்ன காரணம் சொல்லி எல்லாம் விலக்கி வைக்கிறீர்கள் என்று சொல்லுகிற போது அவர்கள் குளிப்ப தில்லை சுத்தமாக இருப்பதில்லை என்று சொல்லுகிறீர்களே, அழுக்கு உடையோடு இருக்கிறார்கள் என்று சொல்கிறீர்களே, குடிக்கவே நீர் கொடுக்காத உங்களுக்கு அவர்கள் அழுக்காக இருக்கிறார்கள் என்று சொல்லுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது. குற்றம் உங்களிடம் இல்லையா என்று தான் கேட்கிறார். அதே மனுதர்ம சாஸ்திரத்தின் வரிகளை அவர் காங்கிரஸ்காரராக இருக்கிற போது காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகிறார். உலகம் என்பதே தொழிலாளர்களுடையது தான். நியாயமாக காங்கிரசும் தொழிலாளர்களுடையதாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் படித்த கூட்டத்தின் பணக்கார கூட்டத்தின் கையில் இருக்கிற காங்கிரசை நாம் மாற்றியாக

வேண்டும். அதை மக்கள் காங்கிரசாக மாற்றியாக வேண்டும் என்று அந்த மாநாட்டில் பேசுகிறார். இதெல்லாம் காங்கிரஸ் காராக இருந்த போது அவர் வைத்திருந்த கொள்கைகள் தொடர்ச்சியாக பல நிகழ்ச்சிகளை சொல்லலாம். இதெல்லாம் 1925 ஜூன் மாதத்தில் நடக்கிறது. அவர் நவம்பர் மாதந்தான் கட்சியை விட்டு வெளியே வருகிறார். அதற்கு பின்னால் சுயமரியாதை இயக்கம் கண்ட பின்னால் ஜாதி ஒழிப்பை முதன்மை இலக்காக கொண்டு இயங்கிய அவர் 1926ம் ஆண்டில் பெண்ணுரிமையை இணைத்துக் கொள்கிறார். பெண் விடுதலையை பற்றி பேசத் தொடங்குகிறார். காலப்போக்கில் 1928ம் ஆண்டில் இருந்து பொது உடைமைக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அதை தன் திட்டத்தில் இணைத்துக் கொள்கிறார். இதனுடைய வளர்ச்சி போக்கில் 1938ம் ஆண்டில் தனித்தமிழ்நாடு என்று முடிவுக்கு வருகிறார். இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்றால் சாதி பேதமற்ற பாலியல் பேதமற்ற பொருளாதார பேதமற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்றால் அதற்கு தனித்தமிழ்நாடு தான் தீர்வாக இருக்கும் என்ற முடிவுக்கு வருகிறார். இப்படிப்பட்ட கருத்துக் களோடு இருந்த பெரியாரியலை மக்கள் முன்னால் எடுத்துச் செல்லுகிற நாங்கள் அதனுடைய ஒரு பகுதியாகத் தான் இந்த பரப்புரையை நாங்கள் தொடங்கியிருக்கிறோம் என்பதை சொல்வதற்காகத் தான் இதையெல்லாம் சொல்கிறேன்.

சாதி ஒழிப்பிற்கு அவர் எடுத்த ஒன்று தான் ஒரு வழி முறையில் ஒன்று தான் பகுத்தறிவு பிரச்சாரம். நம்முடைய இழிவுக் கெல்லாம் காரணம் எதுவென்று கண்ட போது அவர் சொன்னார் நம்மை இந்து என்று கருதிக் கொண்ட தால் நம்முடைய மானத்தை இழந்தோம், பகுத்தறிவை இழந்தோம். நம்மை இந்தியன் என்று கருதியால் நம்முடைய பண்பாட்டை நம்முடைய உரிமைகளை எல்லாம் இழந்திருக்கிறோம். இந்து என்ற கட்டிலிருந்தும் இந்தியன் என்ற கட்டிலிருந்தும் விடுபடுவது தான் தமிழனுக்கான விடுதலை என்று சொன்னார்.

அதன்போக்கில் இன்னொரு பக்கமாக சாதி ஒழிப்பிற்கு இடஒதுக்கீடு என்பதையும் கேட்டார். வகுப்புவாரி உரிமை பற்றி பேசினார்.பின்னால் அதற்கான பல போராட்டங்களை எடுத்தார். அரசியல் சட்டம் எழுதப்பட்ட போது கூட வேலைவாய்ப்புக்கு மட்டும் தான் இடஒதுக்கீட்டை அரசியல் சட்டம் வடித்திருந்தது.

கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு அப்போது வழங்கப்படவில்லை. அதை நாடாளுமன்றத்திற்கோ சட்டமன்றத்திற்கோ சென்றே இருக்காத பெரியார், அங்கு செல்லக்கூடாது என்ற கொள்கை கொண்ட பெரியார் எடுத்த போராட்டம் தான் அந்த முதல் சட்ட திருத்தம் தான் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு என்பதை பெற்றுத் தந்தது. அந்த இடஒதுக்கீட்டிற்கும் வந்த கேடுகள் எல்லாம் அதற்கான தடைகள் எல்லாம் பலவற்றை பார்க்கிறோம். தோழர் இராசேந்திரன் அவர்கள் சொன்னார். மண்டல் ஆணையம் வந்த பின்னால் அது இந்தியா முழுமைக்கும் அதை பற்றிய ஒரு பேச்சு வந்த பின்னால் ஒரு எழுச்சி ஏற்பட்டது. அதையும் அவர்கள் முடிந்தவரை தடுத்து பார்த்தார்கள். நீதிமன்றத்திற்கு போனார்கள். வி.பி.சிங் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பில் மட்டும் தான் இடஒதுக்கீட்டை வழங்கினார். கல்வியில் எல்லாம் கொடுக்கவில்லை. வேலை வாய்ப்பிலும் சில விதிவிலக்குகளை கொடுத்தார். படைத்துறையில் இல்லை. உயர்அறிவியல் ஆய்வுத் துறையில் இல்லை என்றெல்லாம் சில விதிவிலக்குகளை கொடுத்தார். அதையே பொறுத்துக் கொள்ள முடியாத பார்ப்பனர்கள் நீதிமன்றத்திற்கு போனார்கள். அவன் முடிந்த ஒரு கூட்டம் நீதிமன்றத்திற்கு போனது.

அடுத்து வந்த நரசிம்மராவை பற்றி சொன்னார். அவர் தான் இந்த தாராளமயம் தனியார்மயம் எல்லாவற்றையும் இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார் அவருடைய காலத்தில் தான். அவர் இன்னொன்றறை செய்தார். இடஒதுக்கீடு வரம்பிற்குள் வராத சாதியில் இருக்கிற ஏழைகளுக்கு 10% விழுக்காடு இடஒதுக்கீடு என்று சொன்னார். அரசியல் சட்டம் அறியாதவர்கள் அல்ல. ஏற்கனவே பல வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 50% விழுக்காட்டிற் மேல் இட ஒதுக்கீட்டை வழங்க கூடாது என்று சொன்னார்கள். எதற்கும் அம்பேத்கார் பேச்சை கேட்காதவர்கள் அங்கே அம்பேத்கார் அரசியல் நிர்ணய சபையில் பேசி இருக்கிறார் சிறுபாண்மையான இடத்தை தான் இடஒதுக்கீடு அளிப்போமே தவிர நீஙகள் அச்சப்படுவதை போல் பெரும்பான்மை இடத்தை அளித்துவிட மாட்டோம் என்று பேசி இருக்கிறார் எனவே அவர் கூட இந்த கருத்தில் தான் இருந்தார். 50% விழுக்காட்டிற்கும் கீழ் தான் கொடுக்கவேண்டுமென்று என்று பேசி பல தீர்ப்புகள் அதற்கு முன்னால் 1962லேயே வந்துவிட்டது. பாலாஜி .எதிர் . மைசூர் அரசு என்ற வழக்கில் முதலில் சொல்லிவிட்டான். 50% விழுக்காடு மேல் இடஒதுக்கீடு வழங்கக்கூடாது என்று. அதற்கு பின்னால் பல தீர்ப்புகள் வந்தன.

*ஆனாலும் நரசிம்மராவ் மண்டல ஆணையம் பரிந்துரைத்த போது கூட ஏற்கனவே மக்கள் தொகை விழுக் காட்டிற்கு ஏற்ப தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு வழங்க வேண்டும் என அரசியல் சட்டம் சட்டமன்ற நாடாளு மன்றத்திற்கு சொல்கிற அதையே கல்வி வேலைவாய்ப்புகளுக்கு விரிவாக்கி அவர்களுக் கான விகிதாச்சாரத்திற்கு அளித்தாக வேண்டும். எனவே அவர்கள் விழுக்காடு இந்திய அளவில் 15 பழங்குடி மக்கள் விழுக்காடு 7.5விழுக்காடு ஆக 22.5 இடத்தை ஒதுக்கி ஆகி விட்டது. எனவே 52 விழுக்காடாக உள்ள இந்த பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு 52 இடங்கள் கொடுப்பது தான் நியாயம் என்றால் கூட இப்போது நிலவி வருகிற சட்ட நிலைகளை கருத்தில் கொண்டு தான் 50க்கும் கீழாக இருக்க வேண்டும் என்பதால் 22.5 போக 27 இடங்களை பரிந்துரைக் கிறார் மண்டல். அதன் மீதுதான் வழக்குகளும் விவாதங்களும் போராட்டங்களும் நடந்து கொண்டிருக்கிற வேளையில் இதை 50க்கும் மேல் கொடுக்கக்கூடாது என்பதை தெளிவாக தெரிந்து இருந்த நரசிம்மராவ் இடஒதுக்கீடு வரம்பிற்குள் வராமல் சாதியில் இருக்கிற ஏழைகளுக்கு 10 விழுக்காடு என்று அறிவிக்கிறார். அப்ப உயர்சாதிக்காரர்கள் மொத்தம் அவர்கள் விழுக்காடு 14 தான் சொல்கிறார்கள். 14 விழுக்காடு உள்ள மக்களுக்கு அவங்க தான் இடஒதுக்கீடு வரம்பிற்குள் வராதவர்கள். அதிலிருக்கிற ஏழை களுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு செய்கிறார். அப்ப மக்கள் தொகையில் 4 பேருக்கு தான் இடம் கிடைக்காது. பொது இடங்கள் இருக்கிறது 50. அவர் பங்குக்கு தன் ஜாதிக்கு அவர் செய்தது அது. நீதிமன்றத்திற்கு போனார்கள்.*

*இரண்டு செய்திகள் நீதிமன்றத்தின் விவாத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. வி.பி.சிங் போட்ட உத்திரவு செல்லுமா? செல்லாதா? நரசிம்மராவ் பிறப்பித்த உத்திரவு செல்லுமா? செல்லாதா? நீதிமன்றம் நீண்ட நெடிய விவாதங்களுக்கு பின்னால் தீர்ப்புச் சொன்னது. நரசிம்மராவ் போட்ட உத்திரவு செல்லாது. அது சட்டவிரோதமான உத்தரவு. பொருளாதார அளவுகோலை ஏற்றுக்கொள்ள முடியாது சொல்லிவிட்டான். இன்னொன்று வி.பி.சிங் போட்ட உத்திரவு செல்லும். ஆனால் பொருளாதார அளவுகோல் செல்லாது என்று சொன்னவன் தான் "கிரிமீலேயர்" என்ற ஒன்றை சொன்னான். வருமான வரம்பு பார்த்து அதற்கு மேல் இருந்தால் இடஒதுக்கீடு இல்லை என்றும்*

சொன்னான். அதை விட்டுவிடுவோம். அந்தளவுக்கு அது தாண்டி வந்து 1992 நவம்பரில் தீர்ப்பு சொல்லப்பட்டு 1993 ஆண்டிற்கு அப்புறம் 1994ம் ஆண்டு தான் முதல் ஆளை அப்போது தான் நியமிக்கிறார். அந்த சட்டம் வந்த பிறகு முதல் நியமனம் அப்போது தான் நடந்தது. அப்போது தனியார்மயம் என்ற ஒன்று வருகிறது. அவர் சொன்னதை போல இடஒதுக்கீடு இருந்தால் தான் நீங்கள் உள்ளே நுழைவீர்கள். இடஒதுக்கீட்டை இல்லாமல் ஆக்குவதற்கு தனியார்மயம் வருகிறது. அப்பொழுது வாஜ்பாய் ஆட்சிக்கு வந்தவர் அவர் பங்கிற்கு அவர் ஒரு கடமையாற்றினார். பார்ப்பன நலனுக்கு உயர்சாதி நலனுக்கு அவர் பங்கிற்கு 58 ஆக இருந்த ஓய்வு வயதை 60 ஆக உயர்த்தினார் மத்திய அரசு ஊழியர்களுக்கு. ஆக இரண்டு ஆண்டுகளுக்கு பிறப்படுத்தப் பட்டவர்கள் உள்ளே நுழைய முடியாது. அதற்கு பின்னால் சொன்னார்கள் ஆட்குறைப்பு செய்கிறோம் என்று சொன்னார்கள். வங்கித்துறையில், இரயில்வே துறையில் ஆட்குறைப்பு செய்கிறோம் என்று அறிவித்தார்கள். ஆக இடஒதுக்கீடு என்பது நீங்கள் போராடி பெற்றாலும் சரி உங்களை நுழையவிடாமல் பார்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து செய்வோம். என்பதுதான் அது. அது ஒரு பக்கம்.

இன்னொருபக்கம் பொதுத்துறை எல்லாம் தனியாருக்கு போனதை பற்றி சொன்னார்கள். தனியார்துறைக்கு எல்லாம் போய் கொண்டே இருந்தது. நம்மவர்கள் எல்லாம் பெரிய கனவுகளோடு தன்னுடைய குழந்தைகளை படிக்க வைக்கிற பெற்றோர்கள் தன்னுடைய கடைசி சொத்தை விற்றேனும் தன் பிள்ளையை படிக்க வைத்து அதன் வழியாக அவனை அரசு வேலைக்கு அல்லது வேலைகளுக்கு அனுப்பி நம்முடைய குடும்பம் உயராதா ? இந்த இடஒதுக்கீட்டை பயன்படுத்தி அவன் வேலைக்கு போய் நம்மை காப்பாற்ற மாட்டானா ? என்று ஏக்கத்தோடு படிக்க வைத்த பெற்றோர்கள் எல்லாம் அதிர்ந்து போகிற அளவுக்கு தான் தனியார்மயம் உள்ளே நுழைந்தது. ஆட்குறைப்பு ஒரு பக்கம். இன்னொரு பக்கம் தனியார்மயம். அப்போது நாங்கள் பெரியார் திராவிடர் கழகம் தனியார் துறையில் இடஒதுக்கீடு வேண்டும் என்பதை கோரிக்கையாக வைத்து நாங்கள் பரப்புரை பயணங்களை செய்தோம். தனியார்துறையிலும் இடஒதுக்கீடு கொடு. அப்போது இருந்த தனியார்கள் எல்லாம் நம்ம நாட்டு தனியார்கள் தான் அதிகமாக இருந்தார்கள்.

அப்போது நாம் சில கேள்விகளை வைத்தோம். தனியார் மயம்னு என்னய்யா சொல்றது தனியார்துறையே அல்ல. எல்லாம் கேள்வி கேட்டான். நான் கடை வச்சா என் கடையில் யாரை வைச்சிகிறது என்று அரசாங்கமா சொல்றது என்று சொன்னான். நாங்க கேட்டது எல்லாம் மளிகை கடைக்கு எல்லாம் அல்ல. பொதுத்துறை நிறுவனத்திற்கு இணை யாக இயங்குகிற கார்பரேட் கம்பெனிகளுக்கு. அவர்களிடம் நாங்கள் வைத்த வாதங்கள் எல்லாம் அப்போது நீங்கள் தொழில் தொடங்குவதற்கு நிலத்தை யார் கொடுக்கிறார்கள் ? அரசு தான் இலவசமாக நிலம் கொடுக்கிறது. நம் நாட்டில் தொழில் வளரட்டும். மின்சாரத்தை குறைந்த கட்டணத்தில் கொடுக்கிறது. உற்பத்தி தொடங்கி ஐந்தாண்டுகளுக்கு வரி விலக்கை தருகிறார்கள். விற்பனை வரி இல்லை, எந்த வரியும் இல்லை என்று சொல்கிறார்களா. இப்படிப் பட்ட சலுகைகள் எல்லாம் யாரிடமிருந்து வாங்குகிறார்கள் ? என்ற கேள்வியை வைத்தோம்.

அரசு நிலம் என்றால் எங்கள் நிலம் தான் மக்கள் நிலம். அது வரிச்சலுகை கொடுத்தால் மக்களுக்கு வர வேண்டியது தான் குறைகிறது. மக்கள் பணத்தில் இருந்து கொடுக்கிறீர்கள். வங்கியில் இருந்து கடன் கொடுத்தார்கள். வங்கி பணம் என்பது ஏழை மக்கள் எல்லாம் போட்டு வைத்திருக்கிற இட்டு வைப்புத் தொகையாக வைத்திருக்கிற வைப்புத் தொகை தான். அல்லது சேமிப்பாக போட்டு வைத்திருப்பது தான் வங்கியில் இருப்பது எல்லாம். அதை அவனுக்கு கடனாக கொடுத்தான். கடனாக கொடுத்தோடு இருந்தால் பரவாயில்லை திருப்பி வாங்கிட்டா பரவாயில்லை. கடன் வாங்கி தொழில் செய்கிறான் என்று சொன்னால் அவனுக்கு நட்டம் வந்து நடத்தாது போனால் கடன்களை தள்ளுபடி செய்தான். பி.ஜே.பியினுடைய சென்ற ஆட்சியின் இறுதி ஆண்டில் அவர்கள் தள்ளுபடி செய்த வங்கி கடன் மட்டும் ரூ.86,00,00,00,00,000 (86 ஆயிரம் கோடி ரூபாய்). தள்ளுபடி செய்த வங்கி கடன்.

நமக்கு தெரியும் நம்முடைய விவசாயிகள் கடன் வாங்குகிறார்கள். சிறு தொழில் முனைவோர்கள் கடன் வாங்குகிறார்கள். விவசாயி பம்பு செட்டிற்கு ரூ.10,000 கடன் வாங்குவான். மாடு வாங்குவதற்கு ரூ.20,000 கடன் வாங்கி யிருப்பான். ஆனால் வட்டிக்காக அவன் வீட்டில் இருக்கிற சாமாணையும் சேர்த்து எடுத்துக் கொண்டு போவான்.

மோட்டாரும் போயிரும்; கூட இருக்கிற சாமானும் போயிரும். மாட்டை பிடித்துக் கொண்டு போவான் கூட தொலைகாட்சி பெட்டி அதையும் எடுத்துக் கொண்டு போவான். ஜப்தி என்ற பெயரால். ஆக எங்ககிட்ட இருந்து எல்லாம் பாக்கி நிக்கல. கடன் நின்றது எல்லாம் யார் யாரெல்லாம் கடன் தள்ளுபடியில் பணம் பெற்றான் என்றால் பெரும்முதலாளிகள். ரூ.86,00,00,00,00,000 (86 ஆயிரம் கோடி ரூபாய்). தள்ளுபடி செய்த போது அது 500 நிறுவனங்களுக்கு தான் அந்த தள்ளுபடி. அப்ப கடன் தள்ளுபடியானால் அரசாங்கம் கொடுக்கிறது என்றால் அரசாங்கத்திடம் எங்கிருக்கிறது ? வங்கிக்கு எங்கிருந்து பணம் வந்தது ?

எங்கள் இட்டு வைப்புத் தொகைக்கு $^{1}/_{2}$ விழுக்காடு வட்டியை குறைத்தான் அல்லது நாங்கள் பெறுகிற கடனுக்கு $1^{1}/_{2}$ விழுக்காடு வட்டியை கூட்டினான். அதையும் எங்களிடம் தான் வசூல் செய்தான். ஆக நாம் சொன்னோம் அது தனியார்துறை அல்ல. எங்கள் நிலத்தில் எங்கள் வரிப்பணத்தில் இலவச மின்சாரம் பெற்று எங்கள் வரிப்பணத்தில் வரிச்சலுகை பெற்று எங்களுடைய இட்டுவைப்புத் தொகைக்கு வட்டி இழப்பும் வாங்குகிற கடனுக்கு வட்டியை அதிகம் செலுத்தி எங்களுடைய பணத்தில் நடத்துகிற அந்த நிறுவனம் எப்படி தனியார் நிறுவனம்? தனியாரால் நிர்வகிக்கப்படுகிற பொதுத்துறை நிறுவனம் தான் அது. டாடாவின் நிறுவனங்களில் அவனுடைய முதலீடே 6% சதவீதம் தான். 30% சதவீதம் போட்டுத்தான் நிறுவனத்தை தொடங்குவான். தொடங்கிற போதே வங்கி கடன் 70 % சதவீதம் வாங்குவான். பங்குகள் மூலம் நம்மிடமிருந்து பணம் வாங்குவான். ஆக 6 ரூபாய் போட்டுவிட்டு 24 ரூபாய் நம்மிடமிருந்து பங்கு வாங்கி 70 ரூபாய் நம் பணத்தை வங்கியில் இருந்து கடன் வாங்கி நடத்துகிற அந்த நிறுவனம் எப்படி தனியார் நிறுவனம்? எனவே தனியார் நிர்வகிக்கிற பொதுத் துறை நிறுவனம் தான். எங்களுக்கு அதில் இடஒதுக்கீடு கொடுங்கள். இது தான் பெரியார் திராவிடர் கழகம் எடுத்த அந்த பிரச்சார பயணத்தின் நோக்கம்.

எனவே தனியார்துறையிலும் இடஒதுக்கீடு என்று எடுத்ததன் வழியாக சாதி ஒழிப்பிற்கு எடுத்த முயற்சியில் ஒன்றான இட ஒதுக்கீட்டை அதை தொடரச் செய்வதற்கான முயற்சி. பெரியாரின் இலக்கான அதில் ஒரு முயற்சியாக

செய்தோம். அப்போதாவது ஒருவேளை தனியார்துறை நிறுவனங்கள் எடுத்திருந்தால் கூட அதெல்லாம் இந்த நாட்டில் தான் இருந்திருக்கும். தமிழ்நாடு முதலாளியோ அல்லது இந்திய நாடு என்றால் இந்திய நாட்டிலோ அந்த பணம் இருந்திருக்க வாய்ப்பிருந்தது. இப்போதல்லாம் அவன் கூட முதலாளி அல்ல. இப்போதெல்லாம் நேராக வெளிநாட்டிலிருந்து வருகிறான். அங்கிருந்து வருகிறான், நிறுவனம் நடத்துகிறான், போறான். நட்டம் ஏற்பட்டால் போய்விடுகிறான். வருகிற நட்டம் எதுவானாலும் அதுவும் நம்மை தான் பாதிக்கிறது. இழப்பை பற்றி சொல்கிற போது கூட ஆ.ராசா பணத்தில் ரூ.1,76,00,00,00,00,00,000 ஒரு இலட்சத்தி எழுபத்தி ஆறாயிரம் கோடி இழப்பு என்று தான் சொன்னார்கள். வருவாய் இழப்பு அது. வரவேண்டிய பணம் வராமல் போய்விட்டது என்று சொன்னார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கான சிறப்பு உட்கூறு திட்டத்தில் ரூ.4,00,00,00,00,000 நான்கு இலட்சம் கோடி ரூபாயை செலவழிக் காமல் வைத்திருக்கிறார்கள். நமக்கு வரவில்லை. நமக்கு வருவதில் இழப்பு அது. அரசுக்கு வருகிற வருமானத்தில் ரூ.1,76,00,00,00,00, 00,000 இழப்பு ஒன்றே முக்கால் இலட்சம் என்பது எவ்வளவு கண்டிக்கத்தக்கதோ அதைவிட பலமடங்கு கண்டிக்கத்தக்கது இந்த நாட்டின் அடிமட்டத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றுவதற்காக அரசு தீட்டிய திட்டம் அவர்கள் மக்கள் தொகைக்கு போன பணத்தை நிதிஒதுக்கீட்டில் அவர்களுக்கு வழங்க வேண்டும். அதிலிருந்து தாழ்த்தப்பட்ட பழங்குடி முன்னேற்றத்திற்கான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அவர்கள் நலன்களுக்கே அது பயன்படுத்த வேண்டும். ஆனால் பயன்படுத்தாமல் விட்ட பணம் நான்கு இலட்சம் கோடி. இப்ப நம்ம கணக்குப்படி நமக்கு வரவேண்டிய பணத்தில் இழப்பு நான்கு இலட்சம் கோடி. ஆனால் இதை பற்றி அக்கறையற்றவர்களாகத்தான் நாம் இருக்கிறோம்.

அரசுக்கு வருகிற பணம் குறைந்துவிட்டது என்று சொல்கிறோம் ஆனால் இந்த நாட்டின் முழுஉற்பத்திக்கும் காரண மாக இருக்கிற ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சார்ந்த மக்களுக்கு வரவேண்டிய பணம். உழைப்பாளிக்கு வர வேண்டியதெல்லாம் கொடுக்காமல் அரசு ஒருபக்கம் இருக்கிறது. இப்படித்தான் அதை கொஞ்சம் கொஞ்சம் நாம் மாற்ற வேண்டி யிருக்கிறது. நம் நடைமுறைகளை மாற்ற வேண்டியிருக்கிறது. அதில் தான் பன்னாட்டு கொள்ளை

என்பதை பற்றி சொன்னார்கள். பன்னாட்டு கொள்ளை எல்லாம் தோழர் விடுதலை இராசேந்திரன் நிறைய சொல்லி இருக்கிறார் பன்னாட்டு கொள்ளைகளை. அப்ப இந்திய நாட்டிலே அடிக்கிற கொள்ளை இந்திய நாடு அரசை பற்றியும் பலவற்றை சொல்லியிருக்கிறார்.

## பெட்ரோல் விலை

எடுத்துக்காட்டாக ஒன்றே ஒன்று பெட்ரோல் விலையில் மட்டும் நாம் எடுத்துக் கொண்டால் இந்திய நாடு மக்களிடம் எவ்வளவு பறிக்கிறது என்பதை மட்டும் எண்ணிப் பாரத்தால் போதும். அதற்கு சில செய்திகளை சொல்ல வேண்டும். முதலில் இந்திய நாட்டில் பெட்ரோல் விலை ஏறுகின்ற போதெல்லாம் அவர்கள் சொல்லுகிற ஒரே கணக்கு என்ன சொல்கிறார்கள் என்றால் அந்த பெட்ரோல் நிறுவனங்கள் எல்லாம் நட்டத்தில் நடக்கிறது. இழப்பு அதிகமாகிறது. எனவே நாங்கள் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்று தான் சொல்கிறார்கள். அது உண்மையா என்று பார்த்தால் கொஞ்சம்கூட உண்மையில்லை. ஒரு புள்ளிவிவரத்தை நான் கொடுக்க வேண்டும். 2010-2011 இப்பொழுது மார்ச் முடிந்தால் 2011 நிதியாண்டு முடியப் போகிறது. அதில் இரண்டாம் காலண்டிற்கான 2010ல் 01-07-2010ல் இருந்து 30-09-2010 வரை இரண்டாம் காலாண்டு. அதற்கான ஒரு கணக்கை நான் எடுக்க முடிந்தது. அதில் அவர்கள் சொல்கிறார்கள் IOC நிறுவனம் இந்தியன் ஆயில் கார்பரேசன் அவனுக்கு வந்த லாபம் 6126 கோடி. அவன் கொடுத்திருக்கிற கணக்கின்படி. நம்ம கணக்கு அல்ல அவன் கொடுத்து. வரி கட்டியது போக அவனுக்கு லாபம் 5294 கோடி ரூபாய் வந்திருக்கிறது. இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்திற்கு வரி கட்டியது போக 2142 கோடி ஒரு காலாண்டிற்கு. பாரத் பெட்ரோலியம் நிறுவனத்திற்கு அதற்கும் 2142 கோடி வந்திருக்கிறது. இவர்களுக்கு எல்லாம் லாபம் அவ்வளவு வந்திருக்கிறது. ரிலையன்சுக்கு 4923 கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது. அப்ப நட்டத்தில் வந்ததாலா அவர்கள் விலையை உயர்த்துகிறார்கள்? இவர்களுக்கு பெரிய லாபம்; யாரிடமிருந்து பறித்து; நம்மிடமிருந்து பறித்து.

உதாரணத்திற்காக சொல்ல வேண்டும் என்றால் இன்னொன்றறை சொல்லிக் கொண்டிருந்தார்கள். Crude Oil கச்சா எண்ணெய் எல்லாம் விலை ஏறிப்போச்சு என்று

சொன்னார்கள். அதற்கான விவரங்களை நாம் அறிகிற போது நமக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. 2008ல் ஒரு பீப்பாய் 135 டாலருக்கு விற்றுக் கொண்டிருந்த காலத்தில் நமக்கு பெட்ரோல் விலை 54 ரூபாயாக இருந்தது. இப்பொழுது அது 92 டாலராகி விட்டது.135 டாலர் இப்பொழுது 92 டாலராக குறைந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது பெட்ரோல் விலை 63 ரூபாய். அதிகம் விற்ற போது 54 ரூபாய்க்கு கொடுத்தவன் குறைவாக விற்கிற போது இன்னும் கூட்டிக்கொடுக்கிறான்.

அது மட்டுமல்ல வரி என்ற பெயரால் போடுவது எல்லாம் பார்த்தால் அதனுடைய விலையை விட இரண்டு மடங்கு அதிகமாக வரி போடுகிறான். ஒரு பெட்ரோல் லிட்டருக்கு 22 ரூபாய் தான் அதன் விலை. சுத்திகரிப்பு எல்லாம் சேர்த்து. ஆனால் நம்மிடம் 2 இரண்டு மடங்கு கூட வாங்குகிறான். நாங்கள் ஒரு கணக்கை போட்டு பார்த்தோம். ஒருவர் ஒரு மோட்டர் சைக்கிள் வைத்திருக்கிற ஒருத்தர் அவர் ஒரு மாதத்திற்கு 15 லிட்டர் மட்டும்செலவு செய்து மோட்டார் சைக்கிள் ஓட்டுவதாக வைத்துக் கொண்டால் ஒரு மாதத்திற்கு நாம் வாங்குகிற பெட்ரோல் விலையை விட்டுவிடுங்கள் நாம் கட்டுகிற வரி மட்டும் 650 ரூபாய். 15லிட்டருக்கு நாம் அரசுக்கு கட்டுகிற வரி 650 ரூபாய். வருடத்திற்கு 7800 ரூபாய் 8000 ரூபாய் கட்டுகிறோம். 15 லிட்டர் போட்டு ஓட்டுகிறவர் TVS 50 வைத்திருக்கிறவர். அவர் ஒரு ஆண்டிற்கு 8000 எட்டாயிரம் ரூபாய் வரி கட்டுகிறார். ஆனால் இந்த நிறுவனங்கள் இத்தனை ஆயிரம் கோடி சம்பாதிக்கிறது. இதெல்லாம் இவர்களுக்கு லாபம் உண்டாக்கி தர மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்று கருதியிருந்தால் உனக்கான நிருவாகச் செலவு கூட சேர்த்துக் கொள்ளலாம். இன்னும் கொஞ்சம் கூட சேர்த்துக் கொள்ளலாம்.

மூன்று மாதத்தில் 5000 ஐயாயிரம் கோடி ரூபாய் ரிலையன்சுக்கு லாபம். அதனால் தான் உலகத்தின் பணக்காரர் பட்டியலில் அவன் வருகிறான். நாலாவதாக வருகிறான் ஐந்தாவதாக வருகிறான் ஒன்பதாகிவிட்டான் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் நமக்கு என்ன இவ்வளவு நட்டம் ஏற்படுகிறதே இதையெல்லாம் என்ன மனதில் வைத்துக் கொண்டு செய்கிறார்கள். எதை மனதில் வைத்துக் கொண்டு செய்கிறார்கள். நாம் பார்க்கிறோம் கணக்கு எல்லாம்

சொல்கிறார்கள். இந்த நாட்டிலிருக்கிற உற்பத்தியில் ஈடுபடுகிற உழைப்பாளிகள் 74 சதவீதம் பேர் அமைப்பாகாத தொழிலாளர்கள். அவர்களுடைய தின வருமானம் 70 ரூபாய்க்கு கீழ் என்று சொல்கிறார்கள். இந்த பணம் எல்லாம் ஒரு பக்கத்தில் சேர்ந்து கொண்டு இருக்க மற்றொரு பக்கத்தில் இல்லாமல் போகிறது. வருமான இழப்பு ஏற்பட்டு வருமானம் இல்லாமல் அழிந்து போகிறவர்கள் நாம் யாருக்காக ஜாதி ஒழிப்பு பேசிக் கொண்டிருந்தோமோ யாருடைய மேம்பாட்டிற்காக உழைத்தோமோ அந்த பகுதி மக்கள் தான் பாதிக்கப் படுகிறார்கள். அப்ப ஜாதி ஒழிப்பு என்பதை அல்லது அந்த மக்களை மேம்படுத்த வேண்டும் உயரத்த வேண்டும் என்கிற போது அவர்களுக்கு வருகிற பொருளாதார இழப்பையும் சேர்த்து தான் பார்க்க வேண்டி உள்ளது. அதற்காகத் தான் இப்படிப்பட்ட பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டலைப் பற்றி அதற்கு துணை யாக இருக்கிற இந்திய தேசியம் அதற்கு துணையாக மூளையாக இருக்கிற பார்ப்பனர்கள் எல்லோரையும் பற்றி நாம் பேச வேண்டியிருக்கிறது. அதிலிருந்து தான் நாம் பேசுகிற பெரியார் எடுத்த ஒவ்வொரு முயற்சிக்கும் இதையெல்லாம் இணைத்துத் தான் இந்த காலகட்டத்தில் நாம் பேச வேண்டியவர் களாக இருக்கிறோம்.

## புதுமையான கொடுமைகள்

ஒரு காலகட்டத்தில் ஒருவேளை அதை மட்டும் கொள்கை ரீதியாக பேசி மக்களை பகுத்தறிவாதிகளாக்கி இந்து மத கட்டுகளிலிருந்து விடுபட்டு அவர்களை ஒரு வேளை ஜாதி ஒழிந்த சமுதாயமாக படைத்துவிடலாம் என்று கருதிக் கொண்டிருந்தது போக முதல் காலத்தைவிட கொடுமையாக இப்போது புதுமை யான கொடுமைகள் எல்லாம் பார்க்கிறோம். தீண்டாமை கொடுமைகள் என்பது இப்போது புதிதாக தான் சுவர் கட்டுவது எல்லாம் வந்திருக்கிறது. ஒருவேளை தெரியாமலிருந்தவன் எல்லாம் உத்தமபுரத்திற்கு பிறகு பார்த்துக் கொண்டான். வேக வேகமாக சுவர் கட்டுகிறான். அடடே இது தெரியாமல் போய் விட்டதே என்று அவன் கருதுகிறான். அதற்கு அரசு அக்கறை இல்லாமல் இருக்கிறது. அக்கறை இல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை நமக்கு அரசே அப்படிப்பட்ட செயல்களை செய்கிறது. இரட்டை சுடுகாடுகள் என்பதை பற்றி பேசுகிறோம். அரசு தன்னுடைய திட்டத்தில்

கட்டுகிற அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் சுடுகாடுகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுகிறார்கள், மேம்படுத்துகிறார்கள். அந்த திட்டத்தில் கட்டப்படுகிற சுடுகாட்டில் நடுவில் ஒரு சுவர் கட்டுகிறான். இந்த பக்கம் தாழ்த்தப் பட்டவர்கள் சுடுகாடு, இதரர் சுடுகாடு என்று சொல்கிறது. அரசு திட்டத்தில் கட்டியிருக்கிற சுடுகாடு. அதனால் தான் நாங்கள் முடிவு எடுத்தோம் வருகிற புரட்சியாளர் அம்பேத் கருடைய பிறந்த நாள் ஏப்ரல் 14 க்குள் அப்படி இருக்கிற சுற்றுச்சுவர்களை நாமாக இடிப்பது. அரசாங்கத்திடம் இடி என்று மனு கொடுத்து என்ன ஆகப்போகிறது. நாம் போய் இடித்து விடுவோம். வழக்கு போடட்டும் என்னவென்று போடுவான். நாங்கள் எல்லாம் சட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்காக நாங்கள் உதவியாக இருக்கிறோம்.

நாங்கள் ஆயுதபூஜை தடுத்தபோது அது தான் சொன்னேன். மதசார்பற்ற அரசு மதசார்பற்ற அரசு அலுவலகத்தில் எதற்கு மதசார்பு பண்டிகைகளை கொண்டாடுகிறீர்கள்? அரசு வேண்டா மென்று சுற்றறிக்கை எல்லாம் போட்டிருக்கிறது. அண்ணா போட்டார் என்றால் அவர் பகுத்தறிவுவாதி என்று சொல்லிக் கொள்ளலாம். அவர் பெரியாருடைய ஆள் அவர் கொள்கை யெல்லாம் கொஞ்சம் வைத்துக் கொண்டிருந்தார் எனவே போட்டார் என்று. பி.ஜே.பி யினுடைய ஆட்சி காலத்தில் அவன் முடிவு செய்தான். 1994ம் ஆண்டு பி.ஜே.பி யினுடைய ஆட்சியில் இருந்த போது அடிக்கடி மத சண்டைகள் எல்லாம் வருகிறது. இதைபற்றி ஆய்வு பண்ணுவதற்கு உள்துறை அமைச்சகமே ஒரு குழுவை பல்வேறு கட்சிகளும் சேர்ந்து ஒரு குழுவை நியமித் தார்கள். அவர்கள் எல்லாம் ஆய்வு செய்து ஒரு அறிக்கையை கொடுத்தார்கள். முக்கியமான பிரச்சனை எங்கு வருகிறது என்றால் பொது இடங்களில் போய் ஆக்கிரமிப்பில் தான் வருகிறது.

அவன் கோயிலை ஒருத்தன் கட்டுகிறான் இன்னொருவன் கோயிலை இன்னொருத்தன் கட்டுகிறான். இதில் தான் சண்டை தொடங்குகிறது. அரசு அலுவலகங்களில் வருகிறது. அவன் வடநாட்டை வைத்துக் கொண்டு சொல்றான். அங்கு ஒரு மதத்தின் எழுத்துக்கள், ஸ்லோகங்கள் எழுதப்பட்டால் இன்னொரு மதத்துக்காரன் போய் எழுதுகிறான், சண்டை வருகிறது எனவே அங்கிருந்து வருகிறது. முதலில் அரசு

அலுவலகங்களில், பொது இடங்களில் அரசு இடங்களில் மத சம்மந்தமான நிகழ்ச்சிகள் நடத்தாமல் இருந்தாலே சண்டையில் முக்கால்வாசி முடிந்துவிடும் என்று அறிக்கை கொடுத்தான். அதை பி.ஜே.பி அரசு எல்லா மாநில அரசுகளுக்கும் அனுப்புகிறது. இதை கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள். எந்த அரசு அலுவலகங்களிலும் மதப் பண்டிகைகள் நடத்தாமல் வழிபாடு நடத்தாமல் பார்த்துக்கங்க. அதை வாங்கி தி.மு.க ஆட்சி கூட அல்ல ஜெயலலிதா ஆட்சி காலத்தில் தான் எல்லோருக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். ஹரிபாஸ்கர் தான் அப்போது தலைமை செயலாளர். அவர் எல்லோருக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்புகிறார் இந்த மாதிரி இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். புதிய வழிபாட்டு தலங்களை கட்டுவதோ அல்லது இருக்கின்ற தலங்களை புதிப்பிப்பதோ விரிவாக்குவதோ எதையும் செய்யக் கூடாது, மதவழிபாடுகளை நடத்தக் கூடாது என்று சொல்கிறார். அதை திருப்பி எடுத்து காவல்துறை எல்லாம் அறிக்கை அனுப்புகிறது. காவல்துறை யினுடைய குடியிருப்பில் கூட இருக்கக்கூடாது மதவழிபாட்டு தலங்கள் இருக்கக்கூடாது என்றெல்லாம் அரசுகள் ஆணை பிறப்பிக்கின்றன். ஆனால் இவன் வழிபாடு நடத்துகிறான்.

நாங்கள் போன தலைமை செயற்குழுவில் முடிவெடுத்தோம். நாம போய் தடுக்க வேண்டும் இனிமேல், சொல்லிக் கொண்டிருந் தால் மனு கொடுத்தால் எவன் கேட்கிறான் எனவே தடுக்க வேண்டும். எங்கே தடுக்கலாம். அரசு அலுவலகத்தில் தடுத்தால் போய் காவல்துறையில் விண்ணப்பம் கொடுப்பான். நேராக காவல்துறையில் தடுத்துவிட்டால் வேலை முடிந்து போய் விடுகிறது. எனவே காவல் நிலையங்களில் ஆயுத பூஜை நடத்தினால் உள்ளே நுழைந்து தடுக்க வேண்டும் என்று நாங்கள் முடிவு எடுத்தோம். பலஇடங்களில் நுழைந்து தடுத்தோம். அது சிக்கல் எல்லாம் ஆச்சு. அப்போது நாங்கள் சொன்னோம் விண்ணப்பத்திலேயே எழுதியிருந்தோம் நாங்கள் அரசின் சட்டத்தை நடைமுறைபடுத்தும் சட்ட உணர்வோடு நாங்கள் தடுப்போம் என்று எழுதிக் கொடுத்தோம். நாங்கள் எல்லாம் எதிராக பண்ணலை சட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கு அதை காப்பாற்ற வேண்டும் அரசின் சட்டத்தை அவமதிக்கிறார்களே என்ற அக்கறையோடுதான் செய்கிறோம் என்று எழுதிக் கொடுத்ததை போல் தான் இப்போது சொன்னோம் அரசியல் சட்டத்தில் நீங்கள் எழுதி வைத்திருக்கிறீர்கள் தீண்டாமை

ஒழிந்துவிட்டது அதை எந்த வடிவத்திலும் பின்பற்றுவது தண்டணைக்குரிய குற்றம் அரசியல் சட்டத்தின் 17வது பிரிவு சொல்லிவிட்டது. அதற்கு அப்புறம் பல சட்டங்களை கொண்டு வந்தீர்கள். தீண்டாமை ஒழிப்புச் சட்டம் 1956ல் வந்தது. அதற்கு ஒரு பெயர் அப்புறம் கொடுத்தீர்கள் குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் என்று சொன்னீர்கள். அதெல்லாம் ஏமாற்றுவதற்கு. சர்வதேச நாடுகள் உங்கள் நாட்டில் இப்படிப்பட்ட தீண்டாமை இருக்கிறதென்று சொல்லிவிடுவானாம். எனவே அந்த பெயரை மாற்றிவிட்டால் சொல்லமாட்டானாம்.

குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், பி.சி.அர் ஆக்ட் பி.சி.ஆர் சட்டம். பெயரை மாத்திக் கிட்டான், வெளிநாட்டை ஏமாற்று வதற்கு. அதே சட்டம் தான் போட்டான் 1976ல். 1989ல் வன் கொடுமை தடுப்புச் சட்டம் வந்தது. எல்லாச் சட்டமும் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் எதைச் செய்தால் குற்றம் என்று வரையறுத்திருக்கிறார்கள். ஒருவர் தின்னத் தகாத பொருள்களை உண்ணச் சொல்லி கட்டாயப்படுத்தினாலோ அல்லது தின்னக் கூடிய பொருளை உண்ணுகிற பொருளை தடுத்தாலோ இரண்டுமே குற்றமாகும். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில். ஆனால் திண்ணியத்தில் வாயில் மலம் திணித்ததற்கு வன் கொடுமை தடுப்புச் சட்டம் வராது என்று தீர்ப்பு. மேலவளவில் வெட்டியதற்கு வன்கொடுமை தடுப்புச் சட்டம் பொருந்தாது என்று நீதிமன்றம் சொல்லிவிட்டது. கொலை எல்லாம் பண்ணி னான் எல்லாம் சரிதான் ஆனா தீண்டாமை எங்கய்யா இருந்தது. தாழ்த்தப்பட்டவன் தலைவர் ஆனதுக்கு தான் வெட்டினான். வெட்டுப்பட்டவன் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் தான். வெட்டியவர்கள் எல்லாம் ஆதிக்க சாதியினர் தான். ஆனால் அதற்கும் வன்கொடுமைத்தடுப்புச்சட்டம் வராதுன்னுட்டான். இப்படிப்பட்ட சட்டங்கள் தான் நமக்கு இருக்கிறது. அதுபோல நாங்களும் அந்த சட்டங்களை எல்லாம் நடைமுறைபடுத்து வதற்காக தான் இடிக்க போறோம் என்று சொன்னோம். ஆக ஒவ்வொரு நிலையிலும் இருக்கிற சட்டத்தையே நடத்தாமல் இருக்கிறவர்கள் தான் இவர்கள். ஏன்னா இவங்களுடைய அக்கறை எதுவாக இருக்கிறது.

இப்ப பச்சை வேட்டையை பற்றி சொன்னார்கள். அவங் கெல்லாம் என்ன நிலையில் இருக்கிறார்கள். முதலில் வியாபாரத்திற்கு வழிசெய்து தரவேண்டும் என்று அரசு தான்

அவங்களுக்கெல்லாம் வியாபாரம் நடக்கட்டும் நன்றாக என்று வழிவகை செய்து கொடுக்கும். அருந்திரராய் அழகாகச் சொன்னார்கள் இங்கு சென்னைக்கு வந்துபோது சொன்னார்கள். ஏன் இந்த பழங்குடி மக்கள் மீது எல்லா இடங்களிலும் தாக்குதல். அணைகட்டி அவங்களை குடியெழுப்புவதும் அவர்களை தான் செய்தார்கள். நர்மதா அணை திட்டத்தில் எல்லாம் பழங்குடி மக்கள் தான் குடிபெயர்த்தார்கள் அங்கேயும் அவர்கள் தான். அவர்களை எல்லாம் அங்கு விட்டு துரத்துகிறார்கள். உள்நாட்டில் ஏற்கனவே இருந்தே இப்பொழுது 4 நான்கு வழி சாலைக்கு எடுக்கிறார்கள், எடுத்தால் அதற்கான இழப்பீடு தருகிறார்கள். அப்படி ஏதாவது பழங்குடி மக்களுக்கு தருகிறார்களா என்றால் அவன் சொல்கிறான் இது அரசு இடம் என்கிறான் அப்படியே கொடுத்தாலும் குடிசைக்கு அவன் போடுகிற இழப்பீடு தருவான் அதை வாங்கி கொண்டு எங்கோ இருக்கிற தொலை தூரத்தில் தனக்கு சற்றும் அறிமுகமில்லாத இடத்தில் போய் அவன் எப்படி குடியிருக்க முடியும்? அங்கு ஒரு இடத்தை அவன் எப்படி பெற்றுக் கொள்ள முடியும்? ஆனால் அக்கறையில்லாமல் துரத்துகிறார்கள் அது ஒன்று.

அந்த மக்களை மக்களாக கருதாத ஒன்று மனிதர்களாக கருதாத ஒன்று. இன்னொன்று தங்களை தாங்களே தங்களுக் குள்ளேயே உற்பத்தி செய்து தாங்களே நிறைவடைந்து கொள்கிற அப்படிப்பட்ட உற்பத்தி முறை அந்த முறை இல்லாமல் செய்தால் தான் எல்லாவற்றிற்கும் நிறுவனங்களை சார்ந்திருக்க வேண்டும். அவன்கிட்ட வியாபாரிகிட்ட போய் வாங்கிக் கொள்கிற மாதிரி ஒரு சமுதாயத்தை உண்டாக்க வேண்டும். அவனவன் தானே சுயபூர்த்தி செய்து கொள்கிற உற்பத்தி முறையை அழிக்க வேண்டும். அதில் ஒன்றுதான் பழங்குடி மக்கள் மீதான தாக்குதல் என்று அருந்ததிராய் அவர்கள் சொன்னார்கள். பழங்குடி மக்களை அன்றைக்கு ஆங்கிலேயன் தங்களுடைய ஆட்சிக்கு கட்டுப்படாமல் இருந்த அவர்கள் மீது குற்றப்பரம்பரை சட்டத்தை கொண்டு வந்தான். யாரெல்லாம் இந்த ஆட்சியை ஆங்கில அரசுக்கு அடிபணி யாமல் இருந்தார்களோ எதிர்த்து நின்றார்களோ அந்த பழங்குடி மக்களை ஒழிப்பதற்கு தான் குற்றப்பரம்பரை சட்டத்தை கொண்டு வந்தான். அப்புறம் மற்றவர்களை சேர்த்துக் கொண்டான்.

அது போல இப்போதும் பழங்குடி மக்களை அழிப்பதனுடைய நோக்கம் உள்நாட்டில் குடிபெயர்தல் என்பது இருக்கிற அவலத்திலும் அவலம் அது தான். குடிபெயர்தல் அங்கிருந்து உள்நாட்டு குடிபெயர்தல் என்று சொல்வார்கள் அது ஈழத்தில் நாம் பலமுறை பார்த்தோம். அவர்கள் என்ன சொன்னார்கள் அந்த சொல்லை கூட பயன்படுத்தாதீர்கள் Internally displaced people சொன்னாங்க எங்களை எல்லாம் uprooted people என்று சொல்லுங்கள் வேரே அகற்றப்பட்ட மக்கள் என்று சேர்க்க வேண்டும் வேரோடு பிடுங்கி எறிகிறான் எங்களை. நாங்கள் இடமாற்றம் மட்டும் செய்யவில்லை. ஒரு இடத்தில் இருந்து ஒரு இடத்திற்கு போனாலே நம்மாளு சொல்லுவான் மகள் வீட்டிற்கு போனால் கூட சொல்லுவான் இடம்மாறி படுத்தால் எனக்கு தூக்கம் வர்றதில்லை என்று சொல்லுவான். அது எங்க வீட்டுல வழக்கமாக படுக்கிற இடத்தை விட்டு வேற இடத்தை மாற்றி படுத்தாலே தூக்கம் வராது நம்மாளுக்கு. ஆனால் அவர்கள் எங்கு என்று தெரியாத இடத்தில் ஒரு வீட்டில் படுக்கவில்லை தெருவில் படுத்து அப்படியெல்லாம் அங்கு இடப்பெயர்வை போலத்தான் இங்கு பழங்குடி மக்களுக்கும் நடக்கிறது.

அது ஒரு பக்கம் அங்கே பொருளாதார சுரண்டலை பார்க்கிற போது பாதிக்கப்படுகிற மக்களாக இருக்கிறவர்கள் எல்லாம் நாம் யாருக்காக இந்த இயக்கம் நிற்கிறதோ அவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆக இரண்டையும் இணைந்த ஒரு செயல்திட்டத்தை எடுத்துச் செல்ல வேண்டிய தேவையில் இருக்கிறோம். வெறுமனே நாம் இந்த பரப்புரை பயணங்களை வெறும் பெரியார் கொள்கை என்ற பெயரால் பகுத்தறிவு இந்துமத எதிர்ப்பு பிரச்சாரம் மட்டுமே இல்லாமல் அடுத்து சில பொருளியல் சிக்கல்களை பற்றியும் மக்களிடம் விளக்க வேண்டியதும் அதற்கான வழிப்புணர்வை மக்கள் பெற்று அந்த திட்டங்களுக்கு எதிராக மெல்ல மெல்லவாகிலும் அவர்கள் எதிர்த்து கிளம்ப வேண்டும் என்பதையும் தான் நோக்கமாக இப்படிப்பட்ட செய்திகளை நாங்கள் எடுத்து வருகிறோம்.

## பார்ப்பன - இந்திய தேசியச் சுரண்டல்

*அதில் பார்ப்பன இந்திய தேசிய சுரண்டலின் சிலவற்றை பற்றி நாம் பேசியாக வேண்டும். ஏன்னா பெரியார் நான் சொன்ன சாதி ஒழிப்பை பேசினார். பெண் விடுதலையை இணைத்துக் கொண்டார். பொதுவுடைமை சமுதாயத்தை விரும்பினார். இதையெல்லாம் படைக்க வேண்டுமென்று கருதினால் நாம் இந்தியாவில் இருந்தால் ஆகாது என்ற முடிவுக்கு வந்தார். இந்தியா இருக்கும்வரை விடமாட்டான் என்றார். அதற்குத்தான் அவர் சொன்னார் திராவிட நாடு வடநாட்டு சம்மந்தத்தில் இருந்து பிரிந்து தனியாக இருக்க விரும்பும் முக்கிய காரணம் கூட இந்து மதத்தால் ஏற்படும் இழிவும் ஆரிய ஆதிக்கத்தில் இருக்கும் இழிவும் சுரண்டலும் ஒழிய வேண்டும் என்பதற்காகத்தான். அது தான் நோக்கமாக இருந்தது. அவருக்கு இழிவு ஒழிப்பு தான் அவருடைய இயக்கத்தின் அடிநாதமாக இருந்தது இழிவு ஒழிப்பு பிரச்சாரம் தான். கடைசியாக ஒரு மாநாடு கூட தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு தான் இறுதி மாநாடாக அவர் நடத்தினார். அப்படி இழிவு ஒழிப்பு. இழிவு ஒழிப்புக்காக அவர் எடுத்துக் கொண்டது திட்டத்தில் ஒன்று தான் தனித்தமிழ்நாடும் கூட. அவனோடு இருக்கிற வரைக்கும் நாம் இழிவிலிருந்து மீள முடியாது. அவன் இழிவை பாதுகாக்கிற வனாக அவன் இருக்கிறான். காரணம் அவனுடைய உயர் தன்மையை அவன் நிலைநிறுத்திக் கொள்ள அவன் விரும்புகிறான்.*

*பரந்த சந்தை வேண்டுமென்று விரும்புகிற பனியாக்களுக்கு வியாபார கூட்டத்திற்கு நாடே இல்லாத பார்ப்பனர்களுக்கு அவனுக்கு ஒரு நாட்டினம் இல்லை. தமிழ்நாடு என்றால் அவன் தமிழ்நாட்டுக்காரனாக இருக்க முடியாது. அவனுக்கு எந்த நாட்டையும் அவன் எடுத்துக் கொள்வதில்லை. மொழி தேசிய மெல்லாம் பேசிக் கொண்டிருந்தாலும் அவன் மொழியாக தமிழை எப்போதும் ஏற்றுக்கொள்வதில்லை. பேசுகிற மொழியாக வைத்துக் கொள்வான். அவன் மொழி சமஸ்கிருதம் தான் அவன் எண்ணிக் கொள்வது. அப்ப நாடே இல்லாத பார்ப்பனர்களுக்கும், சுரண்டுவதற்கு பரந்த நிலப்பரப்பு வேண்டும் என்று கருதிய பணக்காரனுக்கும் வசதியான இந்திய தேசியத்தை உண்டாக்கி கொண்டார்கள். இந்திய நாடு அதற்குத் தான் துணையாக இருந்தது.*

ஒரு கால்பந்து விளையாட்டு அணின்னா மோதறதுன்னா இந்த பக்கம் 11 பேர் இந்த பக்கம் 11 பேர் என்று வைச்சுக்கிட்டா தான் விளையாட்டு போட்டி கூட நடக்கும். ஒரு இனப் போராட்டம் நடத்த வேண்டுமென்றால் அல்லது பொருளாதார போராட்டம் என்றாலோ வர்க்கமாக பிரித்து சந்திக்க வைக்கிறது பொருளாதார இயக்கங்கள். நாம் இனப் போராட்டமாகத்தான் பெரியார் அறிவித்தார். நமக்கு இன இழிவு இருக்கிறது. ஆரியர்கள் திணித்த இன இழிவு நம் மீது இருக்கிறது அதிலிருந்து விடுபட வேண்டும் என்றால் திராவிடர் களாக ஒன்றிணைவோம் என்று சொன்னார். அவருடைய நோக்கம் இழிவு ஒழிப்பு தான்.

இழிவு ஒழிப்பு வருகிற போது திராவிடர்களாக ஒன்றிணைவோம் என்று சொன்னார். அதன் காரணம் சுரண்டுகிற பார்ப்பனர் களை விரட்ட வேண்டும், அவனிடமிருந்து நீங்கி நிற்க வேண்டும் அவர்களை பகைவர்களாக அடையாளம் காட்ட வேண்டும். பார்ப்பனர்களை வெறும் இந்திய தேசிய எதிர்ப்பு மட்டுமல்ல பார்ப்பன இந்திய தேசிய எதிர்ப்பு. அப்ப பார்பன ஆதிக்கத்திற்கு மூளையாக அவர்களுக்கு ஊற்றுக்கண்ணாக இருக்கிற ஆரிய தர்மங்கள், ஆரிய சாஸ்திரங்கள் அதை எதிர்க்க வேண்டும் என்பதற்கு அடுத்த அணியை திராவிடர்கள் என்று சேர்த்தார் ஒரு பக்கம். இரண்டு பேரும் கலந்துவிட்டார்கள். எப்படி பிரிக்க முடியும் இப்பெல்லாம் பிரிக்க முடியாதே கலந்து விட்டார்கள் எல்லோரும். அது எனக்கு தெரியும் என்றார் பெரியார்.

நான் என்ன ஆரியர் - திராவிடர் என்று இரத்தப் பரிசோதனை செய்து பிரிக்கவில்லை. அவர்களுடைய பழக்க வழக்கங்கள், ஆச்சார அனுஷ்டானங்களை பார்த்து தான் நான் பிரிக்கிறேன். இரத்தப் பரிசோதணை செய்தால் இப்ப பல பேர் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரிய ஆய்வறிஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஒரு ஆய்வகம் லேபராட்டரி வைத்துக் கொண்டே பரிசோதனை பண்ணுவான். இது தமிழ் ரத்தமா ஏதாவது கலப்பு இருக்குதான்னு கண்டுபிடிச்சு பலபேர் அப்ப வந்து பெங்களூர்ல ஒருவர் இருக்கிறார் அவர் பெரிய ஏதோ ஆய்வறிக்கையெல்லாம் அவ்வப்போது விடுவார். இவர் தெலுங்கர் என்றெல்லாம் சொல்லுவார். அப்படி எல்லாம் பெரியார் பிரிக்கவில்லை. அவரே சொல்லுவார் பெரியார் நம்முடைய இயக்கம் சுயமரியாதை இயக்கத்தின் குறிக்கோள் எல்லாம் ஒரு கூட்டத்தை பிரித்து வைத்துவிட வேண்டும்

இனத்தூய்மை பிரித்து பிரித்து வைத்துவிட வேண்டும் என்கிற அந்த சிந்தனையோடு நான் சொல்லவில்லை. இழிவிலிருந்து விடுபட வேண்டும் என்ற சிந்தனையோடு தான் பிரித்து வைக்கிறோம் ஒரு மக்கள் கூட்டத்தை.

இன்னொரு பக்கம் இந்திய தேசியம் பேசியவர்கள் இருந்தார்கள். தமிழ்நாட்டில் கூட மா.பொ.சி இருந்தார். அவர் இந்திய தேசியத்திற்கு எதிரான குரலை எழுப்பி இருக்கிறார். அவரை பற்றி பக்கமாக கூட ஒரு ஏடு வந்ததினாலே அதை பற்றி சிந்தனை எனக்கு வந்தது. ஒரு கட்டுரை அவருடைய கட்டுரை தொகுப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் எழுதுகிறார் அவர் பிராமண ரல்லாதார் இயக்கத்திற்கு காரணமானவர்கள் யாரோ அவர்கள் தான் தமிழகத்தில் தமிழரல்லாதவர் ஆதிக்கம் செலுத்த நேர்ந்த தற்கும் காரணமாவார்கள். பெரியாரை சொல்கிறார். அதற்கு முந்தி யெல்லாம் யாரும் இல்ல. பெரியார் வந்த பின்னால் தான் வந்திருக்கிருக்காங்க என்று எப்படியோ சொல்லட்டும். திராவிட மாயையில் இருந்து விடுபட்டதாக கூறிக்கொண்டு மலையாளிகள் ஆதிக்கத்தை எதிர்க்க புறப்பட்டிருக்கும் பெரியார் ஈ.வெ.ரா முதலில் தமிழரை பிளவுபடுத்தும் பிராமணர் - பிராமணரல்லா தார் கூச்சலுக்கு முற்றுப்புள்ளி வைக்கட்டும் எதை நிறுத்தச் சொல்கிறார் மா.பொ.சி. பார்ப்பான், பார்ப்பனரல்லதார் என்றெல்லாம் பிரித்து பேசக்கூடாது அதை நிறுத்து முதல நீ அப்புறம் மத்ததெல்லாம் பேசு நீ என்ன தமிழனையே பிரிச்சு வைச்சுக்கிட்டிருக்கிறியே என்று சொல்கிறார்.

அப்போது தான் தமிழகத்தில் தமிழரல்லாதாரின் ஆதிக்கத்தை ஒழித்து தமிழ் இனத்தவருக்கு வாழ்வு தேட முடியும் இதை சொல்கிறார். எப்போது நம் தமிழினத்தில் இருக்கிற மற்றவன் ஆதிக்கத்தை ஒழிக்க முடியும் என்றால் பார்பனர்-பார்ப்பனல்லா தார் என்று நீ பிரிக்கக் கூடாது அது நீ தான் கெடுக்கிற மக்களை பிரிச்சு தமிழ்நாட்டையே நாசம் பண்ணிபுட்ட அவங்கெல்லாம் தமிழ் பேசறவங்க தான் நம்மாளு என்று சொன்னார். பெரியார் அதில் மாறுபட்டார். ம.பொ.சிக்கும் பெரியாருக்கும் உள்ள வித்தியாசமே யாரை இணைத்துக் கொண்டார் யாரை வெளியே வைத்தார் என்பதில் தான் இருக்கிறது. அதில் தான் அவர் திராவிடர் என்று சொன்னார். அதற்கான பொருள் அது எல்லாம் அகராதியை பார்த்து சொல்லிவிட முடியாது. அதனுடைய உள்ளடக்கம் என்னவாக இருக்கிறது என்று நாம் பார்க்க வேண்டும்.

## நாங்கள் போட்ட நாடகம்

அகராதியில் பலவற்றை பார்த்தால் தப்பாக கூட வந்து விடும். அகராதி பார்த்து பார்த்து நான் சின்ன வயதில் ஒரு நாடகம் அந்த காலத்தில் போட்டோம். நான் ஒரு நாடகத்தில் நடித்தேன். நான் மொழிபெயர்ப்பேன். ஒருவர் வருவார். Ladies and Gentleman லேடீஸ் அண்ட் ஜெண்டில் மேன்னு சொல்வார். நான் பெண்களே, சாதுவான ஆண்களே என்ற சொல்லுவேன். Gentleman ஜெண்டில்மேன் என்றால் சாதுவானஆள். I am coming from Greenlandநான் பச்சைநிலத்தில் இருந்து வருகிறேன். Do you understand என்பார் நீ அடியில் நிற்கிறாயா அப்படின்னு கேட்பேன். நான் ஆங்கிலத்தில் கேட்டால் அப்படித்தான் மொழிபெயர்த்தால் அப்படியே மொழி பெயர்க்கிறது. உடல்நலனுக்காக நீங்கள் Ladies Finger யும் Drum Stick ஐயும் லேடீஸ் பிங்கரையும் Drum Stick யும் சாப்பிடுங்கபார். நீ தப்பட்டை குச்சிகளையும் பெண்கள் விரலையும் சாப்பிடுங்கள் அப்படின்னு மொழி பெயர்ப்பது. இப்படியெல்லாம் மொழிபெயர்ப்பல்ல.

அணு - Atom ஆட்டம் என்பதற்கான எதற்கு அந்த சொல் வந்தது என்று சொல்வார்கள். லத்தீனில் அந்த சொல்லுக்கு பொருள் பிளக்க முடியாதது என்பது தான் அதனுடைய பொருள். Atom ஆட்டம் என்றால் லத்தீனில் பிளக்க முடியாதது என்று அடிச்சொல்லை கொண்டு தான் அதை வைச்சான். பிளக்க முடியாத சொல்லுக்கு Atom அட்டம் என்று பெயர் வைத்தான். அதற்கு பிறகு பின்னால் அதை பிளக்க முடியும்ன்னு கண்டுபிடித்து விட்டான் Dalton's Atomic Theory யே அப்படித் தான் இருந்தது. அதைமாற்றி நாம் இப்பெல்லாம் அதை பிரிக்க முடியும், உடைக்க முடியும், அதிலிருந்து ஆற்றலை வெளிப் படுத்து முடியும் என்று தெரிந்த பின்னாலும் அதற்கு பெயர் Atom ஆட்டம் தான். இல்ல பிளக்க முடிந்ததுன்னு வேறு பெயர் வைத்துக் கொள்ளலாம் என்று யாரும் நினைக்கவில்லை. என்ன சிந்தனையோடு வைக்கப்பட்டது என்றால் கடைசி கூறாக வைத்தார்கள் அதற்கு ஒரு பொருள் வந்துவிட்டது. அது சொல்லில் இருந்து வேறு அர்த்தமாக இருந்தாலும் சொல்லால் இருக்கிற நேரடி பொருள் வேறாக இருந்தாலும் அது குறிக்கிற பொருள் இது தான்.

ஒரு உள்ளடக்கத்தை ஏற்றுவதென்பது ஒரு சொல்லின் மீது என்பதுஇப்படித்தான். அப்படி ஏற்றித் தான் திராவிடருக்கு ஒரு புதிய உள்ளடக்கத்தை பெரியார் கொடுத்தார். மக்களை பிரிப்பது பலவற்றிற்கு பிரிக்கலாம். பள்ளிக்கூடத்திற்கு ஒரு ஆசிரியர் வந்தார் என்றால் பாடத் தெரிந்தவன் எல்லாம் இந்த பக்கம் வா பாடாத மற்றவன் எல்லாம் இந்த பக்கம் நில்லுனுவார் அவர் நாடகத்திற்கு ஆள் எடுப்பார். விளையாட்டு ஆசிரியர் வருவார் உயரமாக இருப்பவனெல்லாம் இந்த பக்கம் வா குட்டையாக இருப்பவனெல்லாம் இந்த பக்கம் வா எதற்குன்னா Basket Ball Team க்கு கூடைப்பந்திற்கு அணிக்கு எடுக்கனும் கிறார். உயரமாக இருக்கிறவனெல்லாம் வந்தால் நல்லாயிருக்கும் என்று நினைப்பார். பிரிப்பது பல காரணங் களுக்காக. நாடகத்திற்கு பிரித்து வைத்த மாணவர்களை பார்த்து விட்டு விளையாட்டு ஆசிரியர் வந்து ஏண்டா இப்படி பிரிச்சு வைச்சிருக்கான் குட்டை யெல்லாம் இங்க நிக்கறீங்க நெட்டை யெல்லாம் நீ இந்தப்பக்கம் வா என்று சொல்லக்கூடாது.

அவர் நோக்கம் வேறு. இவர் நோக்கம் வேறு. பெரியார் பிரித்ததின் நோக்கம் இழிவை ஒழிப்பதற்காக பிரித்தார். அதற்கான அடையாளங்களை தேர்தெடுத்து தான் அவர் பிரிச்சார். அப்படி பிரித்து தான் சாதி ஒழிப்பை நோக்கி மக்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்று கருதித் தான் அவர் போராடிக் கொண்டு போராட்டத்தில் நாட்டு விடுதலை என்று வருகிற போது தமிழ்நாடு என்று பேசினார். தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தை ஏற்றுக்கொண்டார் அல்லது மாற்றிக் கொண்டார். அந்த போராட்டத்தில் நாம் ஏன் இந்திய தேசத்திற்கு எதிராக நிற்கிறோம்? நான் அடிக்கடி அண்மையில் கூட சில செய்திகளை சொல்லிக்கொண்டு வருவதுண்டு. நாம் எடுக்கிற ஒவ்வொன்றுக்கும் அனைத்து சாதியினரும் அர்ச்சகராக உரிமை வேண்டும் என்று கேட்கிறோம். எது நமக்கு எதிராக இருக்கிறது. வழக்கில் ஏன் அந்த உரிமையை வாங்க முடியாது? பக்கத்தில் இருப்பவன் வாங்கிட்டானே. கேரள நாட்டுக்காரன் அங்கு ஒரு தாழ்த்தப் பட்டவரை நியமிக்கிறார்கள் அது வழக்கு மன்றத்தில் மாவட்ட நீதிமன்றம், உயர்நீதிமன்றம் எல்லாம் போய் உச்சநீதிமன்றத்திற்கு போகிறது. தாழ்தப்பட்டவனை நியமித்தது தப்பு என்று வழக்காடுகிறான் ஒரு பார்ப்பான்,

ஆதித்யன் என்கிற பார்ப்பான். பராசரன் தான் வழக்காடு கிறார் அவனுக்காக. அந்த வழக்கில் தீர்ப்பு வருகிறது கிடையாது இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்ட பின்னால் வேறு எதுவும் செல்லாது இனிமேல். இந்திய அரசியல் சட்டம் தான் பெரிசு. ஒரு சமத்துவ சமுதாயத்தை விரும்பி எழுதப்பட்ட இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்ட பின்னால் அதற்கு முன்னாலோ அது எப்ப ஏற்பட்டாலும் சரி அதெல்லாம் செல்லாது இந்திய அரசியல் சட்டம் தான் பெரிசு. அது ஒரு சமத்துவ உலகத்தை பேசுகிறது. இது அவன் சமத்துவ எண்ணத்தில் தான் தகுதியுள்ள ஒருவரை வழிபாட்டு நடைமுறை களில் ஆகமத்தில் பயிற்சி பெற்ற ஒருவரை தான் நியமித்திருக் கிறார்கள். எனவே இது சட்டப்படி செல்லும் என்று தீர்ப்பு கொடுத்தார்கள். நம்ம தமிழ்நாட்டு அர்ச்சகர் வழக்கு போச்சு சாஸ்திரப்படி தப்புன்னு சொல்றான் தீர்ப்பு. என்ன காரணம்? கேரள வழக்கு நம்மாளுங்ககிட்ட போச்சு. தமிழ்நாட்டு நீதிபதி துரைசாமி ராஜு உட்கார்ந்திருந்தார், தமிழ்நாட்டில் படித்த கர்நாடகத்தில் பிறந்தவர் இங்கு படித்து இங்கு சட்டக்கல்வி பெற்று இங்கு படித்த ராஜேந்திரபாபு ஒரு நீதிபதி. தமிழ்நாட்டின் பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவராகவும் ராஜேந்திர பாபு இருந்தார். எனவே இவர்கள் நீதிபதியாக உட்கார்ந்தார்கள். இவங்க சிந்தனைக்கு கரெக்ட்றா ஏன்னா இந்த ஊரில் பிறந்தவர்கள் இந்த சிந்தனையை ஏற்றுக்கொண்டவர்கள். ஆனால் நம்முடைய வழக்கு வடநாட்டு நீதிபதிகளிடம் போகிறது. அவர்களிடம் இருக்கிற சட்டப்புத்தகம் ஒன்றாக இருந்தாலும் அவனுடைய பார்வை வேறுபடுகிறது. காரணம் நம்முடைய நடைமுறை பழக்க வழக்கம் எல்லாம் வேற அவனுது வேற அவ்வளவு தான். அவன் சாஸ்திரம் தான் பெரிசுன்னான்.

இப்ப தீர்ப்பு சொன்னான்ல ராமர் கோயிலுக்கு சொன்னான்ல. அவர் சரியா பிறந்த இடத்தையே கண்டுபிடிக் கிறான். புத்தர் பிறந்து 150 ஆண்டுகளுக்கு பின்னால் கல்வெட்டு நிறுவப்பட்டது. இந்த இடத்திற்கு பக்கத்தில் புத்தர் பிறந்தார் என்று சொன்னான். 150 வருசத்திற்கு அப்புறம் வைச்சவனே அவ்வளவு தான் வைச்சான். லும்புனி என்ற இந்த ஊரிலிருந்து பக்கத்தில் தான் புத்தர் பிறந்தார் என்று கல்வெட்டு இருக்கிறது. பிறந்து 150 ஆண்டுகளுக்குப்பின் வைக்கப்பட்ட கல்வெட்டே அப்படித்தான் வைக்கிறான். இவன் ஏதோ 12 பன்னிரெண்டே

முக்கால் லட்சம் வருசம் கழிச்சு கூட சொல்றான் இந்த இடத்தில தான் இதே கோபுரத்திற்கு கீழ் தான் பிறந்தார்னு தீர்ப்பு சொல்றான். ஏன்னா அவன் மனநிலையில் சட்டம் இல்லை, அவன் அங்கு வளர்க்கப்பட்ட அவனுடைய சிந்தனை போக்கு தான் இருக்கிறது. அப்ப எங்களுக்கான சட்டம் வரும் பொழுது நீ உன் மனசுல வைச்சட்டு பேசுனா எனக்கு எப்படி சரியாக இருக்கும்.

பெல்ஜியம் நாட்டில் ஒரு வழக்கு நடந்ததாக சொல்வார்கள். ஒருவர் வந்து தமிழ்நாட்டை சேர்ந்த இரண்டு பேர் வழக்கு கொண்டு போறான். என்ன ரொம்ப கேவலமா அவன் பேசிட்டான் சரி என்ன கேவலமா பேசிட்டான் ? என்னை கம்மநாட்டி மகன்னு சொன்னான். அப்படின்னா விதவை பெண்ணின் மகன் ஓ அப்படின்னா என்ன பொருள் நீதிபதி பெண் நீதிபதி தான் உட்கார்ந்திருந்தாங்களாம் கேட்டார்களாம் என்ன பொருள விதவையின் மகன் எனக்கு அது அவமானமாக இருந்தது. இதிலென்ன அவமானம் விதவைக்கு குழந்தை பிறக்காதா என்று அந்த நீதிபதி கேட்கிறார். இல்லைங்க எங்கள் பக்கத்தில் விதவையின் மகன் என்றால் கேவலம் என்றான். அதிலென்ன இருக்கிறது விதவை குழந்தை பெற்றால் அது எப்படி தவறாகும் என்று அவர் கேட்கிறார். அப்புறம் பேசாம நம்மாளு வழக்கை திரும்ப வாங்கிட்டாராம். அங்கெல்லாம் வழக்கு நடத்த வேண்டாமென்று வந்துவிட்டார். ஏன்னா அவன் பண்பாட்டிற்கு பழக்க வழக்கத்தோடு தான் அதை பார்ப்பான். நம்முடைய பண்பாடு பழக்க வழக்கம் வேறாக இருக்கிறது.

நான் நேற்று கூட சொன்னேன் விடுதலை பெறுகிற போது வைத்த பேச்சு இது தான் நம்மாளெல்லாம் பேசுவான் காங்கிரஸ் காரனெல்லாம் பேசினான் அப்போது நீயெல்லாம் யாருடா எங்கள ஆளவந்துட்ட நீ என்ன மொழி பேசற , நான் என்ன மொழி பேசறேன். உன் உடை வேறு என் உடை வேறு. உன் பழக்க வழக்கம் வேறு என் பழக்க வழக்கம் வேறு. உன் உணவு முறை வேறு என் உணவு முறை வேறு. 6000 ஆறாயிரம் மைலுக்கு அப்பால் உள்ளவனா எங்களை வந்து ஆள்வது என்று கேட்டோம். பெரியார் கேட்டார் விடுதலைக்கு அப்புறம் என்னடா ஆச்சு 6000 ஆறாயிரம் மைல் 2000 இரண்டாயிரம் மைலாச்சே தவிர வேறென்ன மாறுச்சு. அதே கேள்வி தானே இருக்கு. 6000 மைலுக்கு அப்பால் உள்ளவனான்னு கேட்டே இப்ப 2000 இரண்டாயிரம் மைலுக்கு அப்பால் உள்ளவன்

ஆண்டு கொண்டிருக்கிறான். அவன் உணவு வேறு நம் உணவு வேறு. அவன் உடை வேறு நம் உடை வேறு. அவன் பழக்க வழக்கம் வேறு நம் பழக்க வழக்கம் வேறு. எல்லாம் வேறடா. அவன் மொழி வேறு நம் மொழி வேறு. அப்புறம் என்ன மைல் குறைஞ்சிருக்கே தவிர அடிமைத்தனம் அப்படியே தானே இருக்கு. இன்னொருத்தனுக்கு அடிமையாக இருக்கிறோம்.

விடுதலை வந்த உடனே அண்ணா சொன்னார் இது மகிழ்ச்சியான நாள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அதற்கு உருவக கவிதையில் சொன்னார். அப்பெல்லாம் வண்டிக் குதிரையாக வைத்துக் கொண்டிருந்தான் இனிமேல் வண்டியில் பூட்றது வேண்டாம் ஏறுகுதிரையாக மட்டும் வைச்சுக்குவான் எனக்கு விடுதலை என்று சொன்னோம் இந்த கிழட்டுக் குதிரை சொன்னது அதுவா விடுதலை? நீ போய் உனக்கு எந்த கடிவாளமும் இல்லாமல் போய் புல்வெளியில் மேய்வதல்லவா உனக்கு விடுதலை. ஏறுகுதிரையாக ஏறிக்குவான் பரவாயில்லை என்கிறாயே அது பரவாயில்லை அப்போது சொல்லுவார் அடிமையே உனை பிடித்த ஆங்கில வண்டி இல்லை வடக்குள குப்பன் உன் வன்முதுகின் மேல் ஏறி கடிவாளத்தை இறுக்குகிறான் அது உனக்கு - வலி தெரியலையா உனக்கு என்று பாரதிதாசன் ஒரு கவிதை எழுதுவார். அதை போல நமக்கு கொஞ்சம் மாறியிருக் கிறது. அந்த அடிமைத்தனம் என்பது ஒரு நாடு ஒற்றுமை சமத்துவம் என்று பேசினால் சரி. அப்படிப்பட்ட நாடுகள் எல்லாம் இருந்திருக்கிறது.

ருஷ்யாவில் இருந்தது. சின்ன சின்ன நாடுகளில் உரிமைகள் எல்லாம் கூட லெனின் அவர்கள் உணர்ந்து உணர்ந்து பார்த்து அதற்கான திட்டங்களை தீட்டியதாக நாம் படிக்கிறோம். அப்படிப்பட்ட ஏதாவது இங்கு இருக்கிறதா என்றால் இல்லை. இப்பெல் லாம் நம்ம நாட்டில் கூலிக்கு வருகிற பீகார்காரன் கூட பெருமிதத் தோடு நடந்து போகிறான் என் நாட்டில் நடக்கிறோம் என்று. உயரதிகாரியாய் போய் வடநாட்டில் இருக்கிற தமிழ் அதிகாரி கூட அப்படியே நடுங்கிப் போய் நடந்து போகிறான்.ஏதோ வெளிநாட்டிற்கு வந்திருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு நடந்து போகிறான் உயரதிகாரி. ஆனால் அங்கு வரும் கூலிக்காரன் இது நம் நாடு மாதிரி வீதியில் அவன் மொழியில் பேசி சிரித்து மெல்ல போகிறான். நாம் அப்படி போக முடியுமா ? அவன் தன்னுடைய நாடு என்பது இந்திய நாட்டை நினைக் கிறான். நம்மால்

எண்ணிப் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் வடநாட்டுக்கு போற போது நாம் தயங்கி பயந்து ஒதுங்கிப் போகிறோம். இதெல்லாம் சேர்த்து சிந்திக்க வேண்டியதாயிருக்கிறது.

நம்முடைய அடிமைத்தனத்தை நிலைநாட்டுகிற பன்னாட்டு சுரண்டல் பன்னாட்டு சுரண்டலுக்கு துணையாக இருக்கிற பார்ப்பனர்கள், பார்ப்பன மூளை ஏனென்றால் ஒரு காலத்தில் விரட்டப்பட்டவர்கள் எல்லாம் நாம் இங்கிருந்து அப்போது பெரியார் எல்லாம் சொல்லுவார் நீங்கெல்லாம் துரத்தி தான் போய் பணக்காரனாயிட்டான் பார்ப்பான் எல்லாம். நான் அவன் பணக்காரன் ஆவதை பற்றி நான் வருத்தப்பட வில்லை அவன் பெரிய ஜாதியாய் இருக்கக்கூடாது அவ்வளவு தான் எனக்குள்ள வருத்தம் என்று சொன்னார். ஆனால் அப்படிக் கூட இல்லை இப்போது எங்கோ இருந்து முற்றும் முதலாக சுரண்டி அவன் நாட்டிற்கு எடுத்துச் செல்கிறான். விடுதலை போராட்டம் அப்படித்தான் நடத்தினீர்கள். இந்திய நாட்டை சுரண்டி எல்லாம் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லுகிறான் என்று சொன்னதை போல எந்தெந்த நாட்டுக்காரனோ இங்கு வந்து நிறுவனத்தை நடத்தி லாபத்தை அங்கு எடுத்துப் போகிறான். நட்டம் ஏற்பட்டால் விட்டுவிட்டு போகிறான். யூனியன் கார்பைடு அத்தனை ஆயிரம் பேரை கொன்று எதுவும் செய்ய முடியாமல் தானே இந்தியா இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழலில்தான் இதையெல்லாம் இணைத்துப் பார்ப்பது தான் சாதியின் அடிமட்டத்தில் இருக்கிற எந்த மக்களை உயர்த்த வேண்டும் என்பதற்காக பெரியார் தொடங்கினாரோ அந்த மக்களை உயர்த்துவதற்கு அந்த மக்களை பாதுகாப்பதற்கு அந்த மக்களின் பொருளியல் நலன்களை பேணுவதற்கு நாம் இதையும் இணைத்துப் பேச வேண்டிய தேவையில் நாம் இருக்கிறோம். எனவே தான் அப்போதெல்லாம் சொல்வார்கள் எது பொற்காலம்? சுயமரியாதை இயக்கத்தின் பொற்காலம் என்றால் சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமை கொள்கைகளும் இணைந்து நடத்திய சுயமரியாதை சமதர்ம காலம்தான் பொற் காலம் என்று சொல்லுவார்கள். அப்படிப் பட்ட ஒரு பொற்காலம் தோன்ற வேண்டும் என்ற ஆசை காரணத்தோடு வருகிறது. வெறும் ஆசைக்காக அல்ல. இப்போது நாம் இப்படியே விட்டுக்கொண்டு போவோமே யானால் இந்த நாட்டின் செல்வங்கள் சுரண்டப்படும் சூறை

யாடப்படும் என்பது மட்டுமல்ல இந்த நாட்டின் உழைக்கும் மக்களாய் இருக்கிற வெகுமக்களாய் இருக்கிற நம்மவர்கள் தான் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் தான் அழிவுக்கு நிலைக்கு போவர்கள் என்பது தான். அவர்களுக்கு ஆட்சியின் எந்த நலன்களும் வந்து சேருவதில்லை என்பதற்கு இந்த பார்ப்பனர்கள் இந்திய தேசியம் அதன் சார்பில் அதன் ஆதரவோடு நடக்கிற பன்னாட்டு கொள்ளை இதெல்லாம் சேர்ந்து நம்மை சுரண்டுகிறது.

எனவே ஒவ்வொன்றாக தனித்து நாம் பார்க்க முடியாது என்ற நிலையில் அனைத்தையும் இணைத்து நாம் எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு முதலில் தமிழர்கள் நமக்கான நாட்டை படைத்துக் கொள்வோம். நமக்கான பொருளாதாரத்தை கட்டமைக்க முயல்வோம். அது வரை நடக்கிற பொருளாதாரச் சுரண்டல்களை தடுப்பதற்காகவாவது நாம் இணைந்து நிற்போம் என்ற வேண்டுகோளோடு விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.